

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அண்ணா அறிவாலயத்தில் பாளை கழகத் தோழர் பழ.கண்ணன் எழுதிய 'நெல்லை முன்னாள் எம்.எல்.ஏ. டாக்டர் பொ.பத்மநாபன் 100' எனும் நூலை வெளியிட்டார்.



சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்குப் பகுதி, 68 (அ) வட்டக் கழகச் செயலாளரும், மாநகர போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்கத் தலைவருமான பி.டி.சி. எஸ்.ரவி புதல்வர் மருத்துவர் எஸ்.சபரிவாசனின் திருமணத்தை முன்னிட்டு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் திருமண அழைப்பிதழை வழங்கி குடும்பத்துடன் வாழ்த்துப் பெற்றனர்.

### வலிமையான தொழில் கட்டமைப்பால் தமிழ்நாட்டின்

# கப்பல்கட்டும் துறைக்கு உறுதியான அடித்தளமிட்டவர் திராவிட மாடல் நாயகர்!

### ஆதாரங்களுடன் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிக்கை!

**சென்னை, ஜூன் 15–**

**தமிழ்நாட்டில் உருவெடுத்து வரும் கப்பல் கட்டுமானத் துறையின் (Ship building Sector) அடித்தளம், முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசால் அமைக்கப்பட்டது என்பதை உரிய புள்ளி விவரங்களுடனும் ஆதாரங்களுடனும் விளக்கி முன்னாள் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-**




தமிழ்நாட்டின் தொழில்வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக கடந்த ஐந்தாண்டுகளும் முழுமையான முயற்சிகளை எடுத்தவர் திராவிட மாடல் அரசின் நாயகரான மு.க. ஸ்டாலின் அவர்கள். தொழில்வளர்ச்சிக்கான முதலீட்டு ஊக்குவிப்பு என்பது வெறும் ஒப்பந்தங்களைப் பெறும் செயல் அல்ல. அது தொலைநோக்கு பார்வை, சரியான நேரத்தில் எடுக்கப்படும் கொள்கை முடிவுகள், உலகப் பொருளாதாரம் எந்த திசையில் நகர்கிறது என்பதைப் புரிந்துகொள்ளும் திறன் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாகும். அந்த புரிதலோடு செயல்பட்ட சிறப்பான அணியை முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருவாக்கியிருந்தார்.

தூத்துக்குடியை மையமாகக் கொண்டு கப்பல் கட்டுமானத் துறையை வளர்க்கும் எண்ணம் ஆரம்பத்திலிருந்தே திராவிட மாடல் அரசிடம் தெளிவாக இருந்தது. சிறந்த துறைமுக வசதிகள், ஆண்டு முழுவதும் கப்பல் போக்குவரத்துக்கு ஏற்ற சூழல், வளர்ந்து வரும் பசுமை ஆற்றல் மற்றும் அருகில் அமைந்த உற்பத்தித் தொழில் வளாகங்கள் ஆகியவை தூத்துக்குடியை ஒரு தனித்துவமான முதலீட்டு மையமாக மாற்றின.

இந்த வாய்ப்பை உலகிற்கு எடுத்துக்காட்ட ஒரு "Anchor Investor" தேவைப்பட்டது. 2024ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாடான #GIM2024 வாயிலாக VinFast உள்ளிட்ட பெரும் முதலீடுகள் உறுதி செய்யப்பட்டதன் மூலம், தமிழ்நாடு உலகளாவிய முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்க்கும் நம்பகமான உற்பத்தி மையம் என்ற செய்தி வலுவாகப் பரவியது. எனினும், கப்பல் கட்டுமானத் துறைக்கான பணிகள் அதற்கு முன்பே தொடங்கியிருந்தன.

2022ஆம் ஆண்டிலேயே புதிய சிறு துறைமுகங்கள், ஆழப்படுத்தல் (Dredging), பெரிய கப்பல்களை கட்டுவதற்குத் தேவையான துறைமுக ஆழம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆய்வுகள் மற்றும் ஆலோசனைகள் தொடங்கப்பட்டன. அதே நேரத்தில், HD Hyundai போன்ற உலகின் முன்னணி கப்பல் கட்டுமான நிறுவனங்கள் இந்தியாவின் பல மாநிலங்களை ஆய்வு செய்து வந்தன. தமிழ்நாட்டின் திராவிட மாடல் ஆட்சியில் உருவாக்கப்பட்டிருந்த கட்டமைப்பு, தொழில்துறை சூழல் மற்றும் ஏற்கனவே உருவாகியிருந்த ஜப்பான்-கொரியா தொழில் சூழல் ஆகியவை அவர்களின் கவனத்தை ஈர்த்தன.

2023 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளில், உலகளாவிய நிறுவனங்களுடனான தொடர்ச்சியான ஈடுபாடுகள் இந்த முயற்சியை மேலும் வலுப்படுத்தின. திராவிட மாடல் நாயகர் அவர்களின் ஜப்பான் பயணத்தின் போது உலகப் புகழ்பெற்ற Imabari Shipbuilding நிறுவனத்துடன் நடைபெற்ற சந்திப்புகள், கப்பல் கட்டுமானத் துறையின் தேவைகளை மற்றும் வாய்ப்புகளை ஆழமாகப் புரிந்து கொள்ள உதவின.

அதேபோல் இந்திய கடல்சார் வாரம் (India Maritime Week 2025), ஸ்காண்டிநேவிய நாடுகளுடனான சந்திப்புகள், DNV, Kongsberg, Innovation Norway உள்ளிட்ட நிறுவனங்களுடனான உரையாடல்கள் மூலம் பசுமை கப்பல் தொழில்நுட்பம், ஹைட்ரஜன் பயன்பாடு, அடுத்த தலைமுறை கப்பல் வடிவமைப்பு போன்ற துறைகளிலும் தமிழ்நாடு தனது இருப்பை வலுப்படுத்தியது.

உலகம் முழுவதும் "China + 1" உற்பத்தி தந்திரம் வேகமெடுத்திருந்த சூழலில், அந்த வாய்ப்பை தமிழ்நாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்ற நோக்கில் தொடர்ந்து பணியாற்றப்பட்டது. குறிப்பாக கப்பல் கட்டுமானத்தில் உலகின் முன்னணி நாடுகளான ஜப்பான் மற்றும் தென் கொரியாவுடன் ஆழமான உறவுகள் கட்டமைக்கப்பட்டன.

HD Hyundai உடனான தீவிரமான ஆலோசனைகள் 2025ஆம் ஆண்டில் மேலும் முன்னேறின. அதே சமயம், ஒன்றிய அரசின் தேசிய கப்பல் கட்டுமானக் கொள்கையுடன் ஒத்திசைவாக தமிழ்நாட்டின் கப்பல் கட்டுமானக் கொள்கையும் தயாராக வைக்கப்பட்டது. பின்னர் #TNRising நிகழ்வில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன் தொடர்ச்சியாக HD Hyundai, NSHIP TN மற்றும் இந்தியாவின் Sagarmala Finance Corporation ஆகியவற்றுக்கிடையிலான ஒப்பந்தங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன.

தமிழ்நாட்டின் கப்பல் கட்டுமானப் பயணம் ஒரு முக்கியமான பாடத்தை கற்றுத் தருகிறது. இதுபோன்ற சிக்கலான மற்றும் நீண்டகால தொழில் துறை முதலீடுகள் திடீர் அறிவிப்புகளால் கிடைப்பதில்லை. அவை முன்கூட்டிய நம்பிக்கை, நீண்டகால திட்டமிடல், தொடர்ச்சியான நிறுவன ரீதியான முயற்சிகள், சர்வதேச உறவுகளின் புத்திசாலித்தனமான பயன்பாடு ஆகியவற்றின் விளைவாக உருவாகின்றன.

இந்தத் துறைக்கான வலுவான அடித்தளத்தை அமைத்தவர் முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களே. அந்த அடித்தளத்தின் மீது தொடர் செயல்பாடுகளைக் கட்டமைத்து, தமிழ்நாட்டை உலகின் முன்னணி கடல்சார் மற்றும் கப்பல் கட்டுமான மையங்களில் ஒன்றாக மாற்றுவதே உண்மையான வளர்ச்சியாகும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.

அரசியல் வேறுபாடுகளைத் தாண்டி மாநில வளர்ச்சிக்காக அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற தலைவர் கலைஞர் வழியிலும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்திய பாதையிலும் தமிழ்நாடு தொடர்ந்து முன்னேற வேண்டும்.

தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்பு, முதலீடு, சமூக நீதி, உள்ளடக்கிய வளர்ச்சி ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்த திராவிட மாடல் ஆட்சியின் பங்களிப்பு தமிழ்நாட்டின் வளர்ச்சி வரலாற்றில் என்றும் நினைவுகூரப்படும்

### தலைவரின் வெற்றியைப் பறித்த – கழகத்தின் தோல்வியை ஏற்க முடியாமல்

# தொண்டர்கள் தினமும் தலைவரைச் சந்திக்கும் நிகழ்வு நெகிழச் செய்கிறது!

### தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் – தங்கம் தென்னரசு ட்விட்டர் பதிவு!





சென்னை, ஜூன் 15–

நடந்து முடிந்த தேர்தலில் தலைவர் அவர்களின் வெற்றி பறிக்கப்பட்டதையும், கழகத்தின் தோல்வியையும் சிறிதும் ஏற்றுக் கொள்ள முடியாத கழகத் தொண்டர்கள் பல ஆயிரம் மைல் தூரத்திலிருந்து சென்னைக்கு வந்து கழகத் தலைவரை தினந்தோறும் சந்தித்து ஆறுதல் பெறும் நெகிழ்ச்சியினைக் கண்டு விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான தங்கம் தென்னரசு தமது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

அவரது ட்விட்டர் பதிவு வருமாறு :-

**கழகத்தின் தோல்வியை, குறிப்பாக தங்களின் வெற்றி பறிக்கப்பட்டதை சிறிதும் ஏற்றுக்கொள்ள முடியாமல் மனம் மறுகி, நூற்றுக் கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து சென்னைக்கு வந்து, தங்களின் முகம் கண்டு ஆறுதல் அடைந்து, இப்படி உணர்ச்சி வெள்ளத்தில் தங்களை ஆழ்த்திக்கொள்ளும் உடன்பிறப்புகள் தான் அறிவாலய வாசலில் தினந்தோறும் ஆயிரக்கணக்கில் குவிகிறார்கள்.**

**தங்களை ஒரு நொடியேனும் பார்த்துவிட்டு, தங்களின் உணர்வைக் கொட்டி விட்டுப் போகவே வருகிறார்கள்.**

**தாங்களும் முகம் கோணாமல், சலிக்காமல் அவர்களுக்கு ஆறுதல் சொல்வதைப் பார்த்தேன். தாயின் பரிவையும், தலைவனின் தன்னம்பிக்கையினையும் கழகத் தோழர்களுக்குச் சேர்த்துத் தந்தீர்கள். கழகப் பொதுச்செயலாளர் அவர்கள் கூட என்னை அருகில் அழைத்து, தாங்கள் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நின்றபடி ஒவ்வொருவரிடமும் தனிப்பட்ட முறையில் பேசி, ஆறுதல் தெரிவித்து, அவர்களுக்குச் செவி மடுத்து, அவர்கள் கொண்டு வரும் புத்தங்களில் அன்போடு கையெழுத்திட்டு, புகைப்படம் எடுத்து அனுப்பி வைக்கின்ற பண்பினையும், ஈடுபாட்டினையும் வியந்து சொன்னார். அதைக் கேட்டு மனம் நெகிழாமல் இருக்குமா?**

**இவ்வளவு பேரையும் பார்ப்பதில் தங்களுக்கு இருக்கும் சிரமத்தை நாங்கள் உணர்ந்திருந்தாலும், தாங்கள் அதனைப் பொருட்படுத்தாமல் இன்முகத்துடன் பேசி வழியனுப்பியதைப் பார்த்து ஒரு வகையில் பூரித்தும் போனோம்.**

**கழகத்தைக் கட்டிக் காக்கும் நீங்கள் இப்போது தட்டியும் எழுப்பி இருக்கின்றீர்கள், தலைவரே! நம்மை எதிரிகள் வெட்ட வெட்ட, பேரறிஞரும் முத்தமிழறிஞரும் தட்டிக் கொடுத்து வளர்த்தெடுத்த கழகத்தின் ஓர்மையை தங்களின் வழியாகக் காண்கிறோம். காலம் தன் புன்னகையை தங்களை நோக்கி வீசுகின்றது, தலைவா!**

இவ்வாறு முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

### திருவள்ளூர் மாவட்டம் ஆரணியில் 3,250 கிலோ கஞ்சா பறிமுதல் – 3 பேர் கைது!

# த.வெ.க. ஆட்சியில் தொடரும் கஞ்சா விற்பனை; போதைப்பொருள் ஒழிப்பில் அரசு தோல்வியடைந்ததா?

### பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கேள்வி!

திருவள்ளூர், ஜூன் 15–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியத்திற்குட்பட்ட ஆரணி தமிழ் காலனி சுடுகாடு அருகே கஞ்சா பதுக்கி வைத்திருந்ததாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் ஆரணி காவல் நிலைய போலீசார் நடத்திய சோதனையில், மூன்று பேரை கைது செய்து அவர்களிடமிருந்து 3 கிலோ 250 கிராம் கஞ்சா மற்றும் 3 செல்போன்களை பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஆரணி சுப்ரமணியன் நகரைச் சேர்ந்த பாலாஜி என்ற சந்தோஷ் (24), நரேஷ் (22), மற்றும் எஸ்.பி. கோவில் தெருவைச் சேர்ந்த சிரஞ்சீவி (26) என அடையாளம் காணப்பட்டனர். அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, பொன்னேரி முதல் நிலை குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, நீதிமன்ற உத்தரவின் பேரில் புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்றது முதல் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கஞ்சா மற்றும் போதைப்பொருள் விற்பனை சம்பவங்கள் தொடர்ச்சியாக வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருப்பதாக பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர். பள்ளி, கல்லூரிகள், குடியிருப்பு பகுதிகளுக்கு அருகிலும் போதைப்பொருள் நடமாட்டம் அதிகரித்து வருவது சமூகத்தில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தேர்தல் பிரச்சாரத்தின் போது "தமிழ்நாட்டில் போதைப்பொருளை முற்றிலும் ஒழிப்போம் என்று வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த அரசு, தற்போது அதிகரித்து வரும் போதைப்பொருள் விற்பனையை கட்டுப்படுத்துவதில் போதிய தீவிரம் காட்டவில்லை என்ற விமர்சனமும் வலுத்து வருகிறது.

குற்றவாளிகளை முழுமையாக ஒடுக்குவதற்குப் பதிலாக, விளம்பரங்கள், புகைப்படங்கள், சமூக வலைதள பதிவுகள் மற்றும் ரீல்ஸ் போன்ற விளம்பர அரசியலிலேயே அரசு அதிக கவனம் செலுத்துவதாக பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் குற்றம்சாட்டுகின்றனர்.

"மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய அரசு, போதைப் பொருள் ஒழிப்பில் உறுதியான நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக காட்சிப் படுத்தும் அரசியலில் ஈடுபட்டுள்ளது. இதனால் இந்த ஆட்சி 'ரீல்ஸ் மாடல் ஆட்சி' என்ற விமர்சனத்திற்கு ஆளாகியுள்ளது. இனியும் தாமதிக்காமல் மாநிலம் முழுவதும் போதைப் பொருள் விற்பனையை முழுமையாக ஒழிக்க கடுமையான நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.



GENZ DMK சந்திப்பு நிகழ்ச்சி புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் – முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் பங்கேற்று விழா குழுவினர் யாசர் அராபத், ராஜராஜேஸ்வரி, கே.ஏ.சையது முஷாரப், எஸ்.வெற்றிச்செல்வன், செங்குட்டுவன், அன்பானந்தன், அரியப்பன், ஹேமந்த் ஆகியோரை பாராட்டி கௌரவப்படுத்தினர். நிகழ்வில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., கழக மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் அண்ணாமலை ரகுபதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு குழுவினர் மற்றும் பல்லாரயிக்கணக்கான இளந்தலைமுறை கழக உடன்பிறப்புகள் பங்கேற்றனர்.